CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

THE KOVAI HERALD
தி கோவை ஹெரால்டு
8th Anniversary Celebrations The Kovai Herald
RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald
Volume 8 | Issue 6 | English & Tamil Weekly | 29.06.2025 Sunday | 6 Pages | Price Rs.3/-

# திமுக பொதுச்செயலாளராகிறார் டி.ஆர்.பாலு

தி கோவை ஹெரால்டு
■ஆ.வெ.மாணிக்கவாசகம்



இந்திய அரசியலில் திமுகவின் பங்கு அளப்பரியது. திமுக தொடங்கிய போது பேரறிஞர் அண்ணா கட்சியின் பொதுச் செயலாளர் பதவி ஏற்று கொண்டார்.

தொடர்ந்து டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் திமுகவின் பொதுச் செயலாளர்களாக இருந்து, அக்கட்சியை சிறப்பாக வழி நடத்தினர்.

பேராசிரியரின் மறைவிற்குப் பின், தொடர்ந்து 50 ஆண்டு கால சட்டப்பேரவை அனுபவம் வாய்ந்த எஸ். துரைமுருகனுக்கு ,கட்சியின் தலைவர் மு க ஸ்டாலின், பொதுச் செயலாளர் பதவி வழங்கினார்.

தமிழக அரசியலில் மூத்தவரும், கலைஞர் கருணாநிதிக்கு நெருக்க மானவருமான துரைமுருகன்,திமுக ஆட்சிக்கு வந்த போதெல்லாம் பொதுப்பணித்துறை, அவர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

2021-ல் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு அமைந்த போது, பொதுப்பணித் துறையினை இரண்டாகப் பிரித்து, நீர்வளத்துறை என பெயரிடப்பட்டு, எஸ். துரைமுருகனுக்கு அமைச்சர் பதவி வழங்கினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அதனை வேண்டா வெறுப்பாக, பொறுப்பு ஏற்றுக் கொண்ட அமைச்சர் துரை முருகன், அமைச்சர் பதவி கிடைத்ததே என்ற நிலையில் தனது பணியினைத் தொடர்ந்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியின் இரண்டாம் ஆண்டின் தொடக்கம் முதல்,முதல்வருக்கும், அமைச்சர் துரை முருகனுக்கும் பல முரண்பாடுகள் ஏற்பட்டன.

'நான் பார்த்து வளர்ந்த பையன் ஸ்டாலின் ....' என்ற இறுமாப்பில், முதல்வர் அனுமதி இன்றி கட்சி, ஆட்சி நிர்வாகத்தில் தனக்கு தோன்றியதை அமைச்சர் துரைமுருகன் செய்கிறார் என திமுகவின் நிர்வாகிகள் பலர் வெளிப்படையாகவே பேசினார். இதை நிரூபிக்கும் வகையில், முதல்வர் மு க ஸ்டாலினும், அமைச்சர் துரை முருகனும் சில மாதங்கள் பேசிக்கொள்ளாமல் இருந்தனர் என அப்போதே கோட்டை வட்டாரங்களில் கசிந்தன.

அமைச்சராக உதயநிதி பொறுப்பேற்றதை,கட்சியில் உள்ள அனைத்து தரப்பினரும் வரவேற்ற நிலையில், துரை முருகன் அதற்கு முட்டுக்கட்டை போட்டார் என பேசப்பட்டது. இது போன்ற சில காரணங்களால் துரைமுருகன் மீது கடும் அதிர்ச்சியில் இருந்து வரும் முதல்வர் கடந்து சில மாதங்களுக்கு முன், பொன்முடி மீது நடவடிக்கை எடுத்த கடிதம் பொதுச்செயலாளர் துரைமுருகன் பெயரில் வெளியாவதற்கு பதில் நேரடியாகவே முதல்வர் பெயரில் வெளியானது. அப்போதே துரைமுருகன் திமுகவில் இருந்து ஓரம் கட்டப்பட்டு விட்டார் என பரவலாக பேசப்பட்டது.

இதனை எடுத்து துரைமுருகன் கைவசம் இருந்த கனிமவளத்துறை பறிக்கப்பட்டு அமைச்சர் ரகுபதி இடம் வழங்கப்பட்டது. தற்போது பொதுச்செயலாளர் பதவியில் உள்ள துரைமுருகன் பதவி பறிக்கப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் டி ஆர் பாலுவிடம் கொடுப்பதற்கான வேலைகளை திமுக தலைமை செய்து வருவதாக அண்ணா அறிவாலய வட்டாரங்கள் தெரிவித்து வருகின்றன.

> தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் டி ஆர் பாலுவுக்கு, பொதுச் செயலாளர் பதவி கொடுத்து விட்டு, அவர் வகித்து வரும் பொருளாளர் பதவியினை, அமைச்சர் ஏ.வ.வேலுவுக்கு வழங்க திமுக முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

இந்நிலையில் துரை முருகன் மீது மணல் விவகாரத்தில் பல ஆயிரம் கோடி ரூபாய் அவர் வசமாக்கிக் கொண்டார் என, மத்திய அமலாக்கத் துறையும், எதிர்க்கட்சிகளும் தொடர்ந்து கூறி வந்தன.

மேலும், அமைச்சர் பணியில், அதிகாரிகள் கோப்புகளைக் கொண்டு வந்து கொடுத்தால், அதில் கையெழுத்து போட்டு விட்டு,மறுநாள் நான் எப்போது போட்டேன் என்ற மறதி வியாதியும் அவருக்கு தொற்றிக் கொண்டதால், அவரை பொதுச்செயலாளர் பதவியில் இருந்து, அவராகவே விடுவித்துக் கொள்ளும் நிலையை திமுக தலைமை ஏற்படுத்தி வருவதாக திமுக உடன் பிறப்புகள் மகிழ்ச்சியாக பேசிக் கொள்கின்றனர்.

இம்மாதம் முதல் வாரத்தில் மதுரையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில், பொதுச் செயலாளர் மாற்றத்தை செய்ய வேண்டுமென, திமுக தலைமை திட்டமிட்டு இருந்தது. ஆனால் அதற்கு துரைமுருகன் மறுப்பு தெரிவித்ததால், பொதுச் செயலாளர் மாற்றம் நிகழவில்லை எனவும் கூறப் படுகிறது.

மூத்த தலைவர் என்ற முறையில் துரைமுருகன் அவராக முன் வந்து அவருடைய பொதுச் செயலாளரின் பதவி ராஜினாமா செய்ய வேண்டும், கட்சி தலைமை அவரை நீக்கிவிட்டு வேறு ஒருவரை பொதுச் செயலாளர் அது சரியாக இருக்காது என்பதால் தொடர்ந்து துரைமுருகனை பொதுச்சேலம் பதவியில் இருந்து ராஜினாமா செய்ய திமுக தலைமை அழுத்தம் கொடுத்து வருகிறது.

அவரது மகன் கதிர் ஆனந்த் எம்பியிடம் ,தங்களது அப்பாவிடம் பேசுங்கள்; உங்களுக்கு உயர் பதவி காத்திருக்கிறது என மகனிடம் பேச்சு வார்த்தை நடந்து வருவதாக கூறப்படுகிறது.

தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் டி ஆர் பாலுவுக்கு, பொதுச் செயலாளர் பதவி கொடுத்து விட்டு,அவர் வகித்து வரும் பொருளாளர் பதவியினை, அமைச்சர் ஏ.வ.வேலுவுக்கு வழங்க திமுக முடிவு செய்துள்ளதாக கூறப்படும் நிலையில் செப்டம்பர் 15-ஆம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் பொதுச் செயலாளர் மாற்றம் உறுதியாக நிகழக் கூடும் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




## கோவையில் ஐந்து கிராமங்கள் 'மாதிரி சூரிய சக்தி கிராமம்' திட்டத்திற்குத் தேர்வு

பிரதமரின் மாதிரி சூரிய வீடு இலவச மின்சாரத் திட்டம் மற்றும் மாதிரி சூரிய சக்தி கிராமம் திட்டத்தின் கீழ், வீட்டின் மேற்கூரையில் சூரிய தகடுகள் அமைப்பவர்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. 1 கிலோவாட் சூரிய தகடுகளுக்கு ரூ.30,000, 2 கிலோவாட் சூரிய தகடுகளுக்கு ரூ.60,000, மேலும் 3 கிலோவாட் சூரிய தகடுகளுக்கு ரூ.78,000 வரை மானியம் வழங்கப்படுகிறது. கோவை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அரசூர், சொலவம்பாளையம், புரவிபாளையம், தீத்திபாளையம் மற்றும் கொண்டையம்பாளையம் ஆகிய உள்ளிட்ட 5 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஜூலை 1, 2025 முதல் ஆறு மாத காலத்துக்குள் இந்த கிராமங்களில் போட்டி முறையில் அதிக சூரிய சக்தி பயன்பாட்டை மேற்கொள்ளும் ஒரு கிராமம் "மாதிரி கிராமம்" என தேர்வு செய்யப்படவுள்ளது. அந்தக் கிராமத்திற்கு கூடுதலாக ரூ.1 கோடி மானியம் வழங்கப்படும்.

## அருப்புக்கோட்டையில் அஷ்டலிங்க விநாயகர் கோவிலுக்கு நடிகை த்ரிஷா இயந்திர யானை அன்பளிப்பு



விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் உள்ள புகழ்பெற்ற அஷ்டலிங்க ஆதிசேஷ செல்வ விநாயகர் மற்றும் அஷ்டபுஜ ஆதிசேஷ வாராஹி அம்மன் கோயில்களுக்கு, நடிகை த்ரிஷா மற்றும் சென்னை மெர்கெஸ் தன்னார்வ அமைப்பு இணைந்து, பிரம்மாண்ட இயந்திர யானை ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

'கஜா' என பெயரிடப் பட்டுள்ள இந்த இயந்திர யானை, இயற்கை யானையை ஒத்த வடிவமைப்புடன் அமைக்கப் பட்டுள்ளது. சுமார் 3 மீட்டர் உயரம் மற்றும் 800 கிலோ எடையுள்ள இந்த யானையின் மதிப்பு ரூ.8 லட்சம் ஆகும். சக்கரங்களின் உதவியுடன் நகரக்கூடிய இந்த கஜா யானை, தண்ணீர் பீச்சுதல், தலையை அசைப்பது, காதுகள், துதிக்கை இயக்கம் போன்ற செயல்களையும் இயல்பாக செய்யக் கூடிய வகையில் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்த யானையின் அறிமுகவிழா நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

த்ரிஷாவின் இந்த முயற்சி, கோயில்களில் நிகழ்ச்சிக்காக உயிருள்ள யானைகளை பயன்படுத்துவதற்கு மாற்றாக தொழில்நுட்ப தீர்வு காண்பதற்கான முன்னோடியாகப் பார்க்கப்படுகிறது.

விலங்கு நல ஆர்வலராக அறியப்படும் த்ரிஷா, இந்த இயந்திர யானையை வழங்கியதன் மூலம், கோயில் விழாக்களில் யானைகளுக்கு ஏற்படும் சுமைகளை தவிர்க்கும் நோக்கத்துடன் செயல் பட்டுள்ளார்.

பிஎஃப்சிஐ அமைப்புடன் இணைந்து மேற்கொண்ட இந்த முயற்சி, தமிழ்நாட்டில் உள்ள பிற கோயில்களுக்கும் முன் மாதிரியாக அமைவதாக வலியுறுத்தப் படுகிறது.

கோயிலுக்கு வரும் பக்தர்களும் பொது மக்களும் இந்த இயந்திர யானையின் அருகில் நின்று போட்டோ எடுத்து மகிழ்கின்றனர்.

## விவேகானந்தர் பொன்மொழிகள்

- உனக்கு தேவைப்படும் சக்தியும் உதவியும் அனைத்தும் உன்னுள் உண்டு.
- சிந்தித்து செயல் ஆற்றுவது மேலானது. மனதை உயர்ந்த இலட்சியங்களாலும் சிந்தனைகளாலும் நிரப்பி, அவற்றை தினமும் பின்பற்றி நல்ல செயல்களை உருவாக்கு.
- நீ என்ன நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். உன்னை வலிமை உள்ளவனாகக் கருதினால், முயற்சியுடன் அது சாத்தியமாகும்.
- அன்பு தான் மிக சக்திவாய்ந்த ஆயுதம். பெரிய ஆயுதங்களால் முடியாததை அன்பால் வெல்ல முடியும்.



LAKSHAKA TEX LIMITED




## Kotak Securities Launches Kotak Stockshaala

Kotak Securities, one of India's leading brokerage houses, announces the launch of Kotak Stockshaala - a free multilingual learning platform offering capital market education to investors and traders across the country. The platform, also accessible via Kotak Neo App, offers learning in two formats, Video-Based Courses and Text-Based Courses: Five comprehensive courses divided into over 200 easy-to-understand chapters, available in English and Hindi. Additional regional languages will be introduced soon. Shripal Shah, MD & CEO, Kotak Securities, Ashish Nanda, President & Chief Digital Business Officer, Kotak Securities, made the announcement.

## Confidence without Clarity is a disaster

THE KOVAI HERALD

**Sadhguru,**
**Isha Foundation**



Belief systems are not just about God and heaven. People are trying to handle many aspects of their life with various types of belief systems they just believe. Depending upon their social, educational, family and other community backgrounds, accordingly they believe certain things. Once you believe, you become confident. Confidence without clarity is a real disaster in life.

You will see this kind of confidence in lots of people because they believe God is with them always. Once you get such confidence, you will lose all sense of every step that you take, even to turn back and see "Was it ok or not?" You will carry on blatantly without any sense about life because you have confidence and God is with you. Very dangerous, isn't it? People who believe that they are doing God's work have always been the most dangerous people on the planet simply because it gives you confidence without clarity.

Suppose you want to cross a busy highway. You do not look right or left, you just utter some god's name and run across. You may make it. Do you know, quantum mechanics says there is a one-in-a-zillion chance you may even walk through a wall. Quantum mechanics proves this and it is so. So you can always make it by chance or maybe a few compassionate drivers will stop. But if you try this every day, we will have to scrape you off the highway.

What a human being needs is clarity not confidence. If you want to walk through a crowd of people, if your vision is clear and you can see where everyone is, you can just walk through the whole crowd without touching anyone. If your vision is not clear but you have confidence, you will walk over everyone. Because they have no clarity, people think confidence is a good substitute. It is not. Why don't you try making all the major decisions in your life like this: get yourself a 1-rupee coin; flip it, heads this way, tails that way. It works 50% of the time. If you are right only 50% of the time, there are only two professions you can keep a weather man or an astrologer. These two things you can do. You cannot keep any other job on this planet.

## Kovai Anantha Subramanian Honoured with "Nataka Kalai Nidhi" Title



THE KOVAI HERALD

▸ Veteran theatre artist Kovai Anantha Subramanian was honoured with the prestigious title "Nataka Kalai Nidhi" by Maruthi Gana Sabha, Coimbatore, in recognition of his 58 years of contribution to Tamil theatre. The award was presented during the Kodai Nataka Vizha by M. Krishnan, Chairman of Sri Krishna Sweets, in the presence of theatre legend Kathadi Ramamurthy and Hemanathan, Deputy Director, Department of Art & Culture, Chennai.

## World Asteroid Day Raising Awareness for Planetary Defense

THE KOVAI HERALD

■ *Dr. K.Abirami*



Every year on June 30, the world observes World Asteroid Day, a global awareness campaign aimed at educating the public about asteroids and the importance of protecting Earth from potential asteroid impacts. The date marks the anniversary of the Tunguska event in 1908, when a massive explosion caused by an asteroid or comet flattened around 2,000 square kilometers of forest in Siberia, Russia.

World Asteroid Day was officially declared by the United Nations in 2016, following a proposal by the Asteroid Day organization founded by Dr. Brian May (astrophysicist and guitarist of Queen), filmmaker Grig Richters, astronaut Rusty Schweickart, and others. The day is a call to action for scientists, governments, and the public to work together toward better asteroid detection, tracking, and deflection technologies.

Asteroids are remnants from the early formation of the solar system, offering valuable scientific insights. However, their potential to impact Earth and cause widespread damage makes them objects of concern. The Earth is constantly bombarded by small space rocks, but larger ones, though rare, can cause devastating effects. For instance, the Chelyabinsk meteor in 2013 injured over 1,000 people in Russia when it exploded in the atmosphere.

Organizations such as NASA, ESA (European Space Agency), and others have taken steps to monitor near-Earth objects (NEOs). In 2022, NASA's DART (Double Asteroid Redirection Test) successfully demonstrated the ability to alter an asteroid's path, marking a milestone in planetary defense.

On World Asteroid Day, space agencies, research institutions, and observatories host public lectures, interactive workshops, telescope viewings, and live-streamed events. These activities aim to engage students, educators, and the general public in understanding the role of science and technology in safeguarding Earth.

World Asteroid Day is more than a date on the calendar—it is a reminder of the dynamic nature of our solar system and the need for global cooperation in scientific research and disaster preparedness. As our knowledge and technology grow, so does our ability to predict and prevent catastrophic asteroid impacts, ensuring a safer future for all.

## Rtn Jayamurali Balaguruswamy installed as new President of Rotary Club of Coimbatore Ikons



THE KOVAI HERALD

Rotary Club of Coimbatore Ikons celebrated its Charter Day and Installation Ceremony marking a significant milestone in its commitment to community service and leadership.

The event commenced with a warm welcome by outgoing President Rtn N. Karthikeyan. The Charter Day celebration honoured the club's founding members and recognized its ongoing dedication to the Rotary ideals of "Service Above Self."

The highlight of the evening was the formal installation of the Incoming President Rtn Jayamurali Balaguruswamy & Secretary Rtn K Ra. Sudha, and the Board of Directors for the Rotary year 2025-26. The installation was conducted by Dr Kezevino Aram, President - Shanti Ashram, who commended the club's efforts in driving positive change in the community. In his acceptance speech, President Rtn B Jayamurali outlined the club's vision for the coming year. The ceremony was attended by Rotarians and their families, Rotaractors and guests, reflecting the spirit of fellowship and service that defines Rotary. The event concluded with a vote of thanks and a renewed commitment to making a difference.

## Lift Facility Nears Completion at Marudhamalai Murugan Temple



Coimbatore, June 24: The construction of a state-of-the-art lift facility at the Marudhamalai Murugan Temple in Coimbatore, undertaken by the Hindu Religious and Charitable Endowments (HR&CE) Department at an estimated cost of ₹5.20 crore, is nearing its final stage, sources confirmed.

The popular hill temple currently requires devotees to either climb a long flight of steps or walk along a winding hill path from the base. Devotees arriving at the parking area must climb approximately 150 steps to reach the temple premises.

To ease the journey, especially for elderly and physically challenged devotees, Chief Minister M.K. Stalin laid the foundation stone for a lift project in April 2023. As part of the initiative, two lifts are being installed. Each lift can accommodate 20 persons at a time.

The first lift will carry devotees 14 metres upward from the parking area. From there, they will walk a 35-metre stretch to reach the second lift, which will take them directly to the temple entrance.

According to officials, the construction of the first lift has been completed. However, some rock excavation work remains for the installation of the second lift. With only 15% of the work pending, the entire facility is expected to be fully operational by August 2025.

Once completed, the lift system will significantly enhance accessibility to the temple, benefiting thousands of devotees visiting Marudhamalai each year.

## Road Safety Must Precede Speed, Says State Highways Engineer Manu Neethi

THE KOVAI HERALD



Emphasising the need to place public safety above the rapid acceleration of automotive technology, G. Manu Neethi, Divisional Engineer Road Safety, Tamil Nadu State Highways, underscored that performance advancements in vehicles must be accompanied by robust safety measures. He was speaking at the inaugural session of the Conference on Electric Vehicles & Allied Industries, held in Coimbatore

Organised by the Society for Smart E-Mobility (SSEM), the conference was themed "Electric Vehicles The Future of Transport." In the absence of K. Ramasamy, Patron & Trustee of SSEM and Chairman of the Roots Group of Companies, the keynote address was delivered by Manikandan, Founder President of SSEM and Founder of Greenerg Solutions Private Limited.

The event also featured a welcome address by Dr. Chandrasekar, Founder Trustee and Vice President SSEM & Corporate Director, Roots Group of Companies.

The conference saw active participation from SSEM leadership and members, including Hemalatha Annamalai, Patron & Trustee, SSEM and Founder & Chairperson, Green Collar Agritech Solutions Private Limited, Sudhakar V, Executive Committee Member, SSEM and Managing Director, Surya Batteries Private Limited.

## Sub-Inspector from Coimbatore Selected for Tamil Nadu Chief Minister's Anti-Drug Award

THE KOVAI HERALD



Sub-Inspector Dhanabalan from the Podanur Police Station in Coimbatore has been selected for the prestigious Tamil Nadu Chief Minister's Anti-Drug Award for his exceptional service in curbing drug-related crimes.

Dhanabalan is among 15 police personnel across Tamil Nadu who have been recognized for their outstanding contribution to anti-drug operations. His efforts in cracking down on drug traffic king and sales have resulted in 55 cases being filed and 169 individuals arrested.

As part of these operations, Dhanabalan led the seizure of significant quantities of narcotics, including 161.4 kg of ganja, 77 grams of methamphetamine, and 4.12 tonnes of gutkha products. Additionally, 29 two-wheelers and 5 cars used in drug transport were confiscated during the investigations. The award will be presented by the Chief Minister of Tamil Nadu on August 15 in Chennai, honoring the recipients' commitment to eradicating the menace of narcotics from society.

## Unique Farmer ID Mandatory for Availing Government Schemes Coimbatore Agriculture Department Issues Notification

The Coimbatore District Agriculture Department has announced that all farmers must link their Aadhaar number, mobile number, and land ownership details with their registration data to receive a National Unique Farmer Identification Number (UID). This UID will be essential to benefit from central and state government schemes starting from the financial year 2025-26.

Schemes like the Pradhan Mantri Kisan Samman Nidhi (PM-KISAN) and Crop Insurance Scheme will soon require farmers to possess this UID for direct access to benefits, subsidies, and services.

As part of the government's ongoing digitization efforts, the Union Government has introduced the 'Farmers Registry' mobile application, allowing the creation of a unique identification number for each farmer across the country. Already, several farmers have successfully registered and received their IDs.

In Tamil Nadu, this registration process is being facilitated by Agricultural Extension Centers, where farmers can update their details. The UID, much like the Aadhaar number, will become a vital reference point for all agriculture-related services, including bank loans and subsidies. The UID will eliminate repeated document submissions and speed up access to government schemes.

In a statement, Coimbatore District Joint Director of Agriculture Dr. Krishnaveni said: "Coimbatore district has 85,429 registered farmers. Of them, 68,596 have enrolled under the PM-KISAN scheme. However, only 39,026 farmers have registered for the Unique ID so far. To receive timely government assistance, it is important that all farmers complete this process without delay."

The Tamil Nadu government is also implementing the State Agricultural Layering Scheme, aimed at digitally collecting and integrating farm ownership and cropping data to streamline service delivery.

Dr. Krishnaveni urged all farmers who have not yet registered to visit their nearest Agricultural Extension Centre or Common Service Centre (CSC) with their Aadhaar number, mobile number, and land documents. The registration process is free of cost, and all eligible farmers are requested to complete it on or before June 30, 2025.

## 27th Freshers' Welcome Ceremony Held at Nehru Arts and Science College

THE KOVAI HERALD



Nehru Arts and Science College (Autonomous), Coimbatore, conducted the 27th Freshers' Welcome Ceremony for the first-year undergraduate students of the academic year 2025 2026 at the Shri P. K. Das Memorial Auditorium. The event marked a warm and heartfelt welcome to the newcomers. Dr. V. Vijayakumar, Principal of Nehru Arts and Science College, welcomed the freshers and attendees. Dr. P. Krishnadas, Chairman of Nehru Group of Institutions and Honorary Trade Commissioner to Mauritius, presided over the function.

The Chief Guest, Dr. K. Karthikeyan, Superintendent of Police, Coimbatore, stressed the value of comprehensive education. Dr. P. Krishnakumar, CEO and Secretary of Nehru Group of Institutions, delivered a special address. The Special Guest Wing Commander Sudhan Rai of the Indian Air Force, stressed the importance of academic excellence, active participation in co-curricular activities, and upholding strong values. congratulated the institution's efforts in skill development and encouraged new students to make full use of the resources available to them.

Noor Ferinsha, Quality Control Manager at AVIS Super Specialty Hospital, Palakkad, also attended as a guest of honour. Dr. H. N. Nagaraja, Director of Administration and Academics at Nehru Group, Dr. P. Anirudhan, Nominated Registrar of P. K. Das University, were present during the occasion Dr. S. Saraswathi, the event coordinator gave the Vote of thanks.

# கோவை மாநகராட்சி மன்ற கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர்கள் சஸ்பெண்ட்




திி கோவை ஹெரால்டு

கோவை மாநகராட்சி மன்ற கூட்டம் கடந்த சில தினங்களுக்கு முன் பரபரப்பாக முடிந்தது. கூட்டத்தின்போது அதிமுக கவுன்சிலர் பிரபாகரன் பேச முயன்றதற்கு, திமுக கவுன்சிலர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு எழுந்தது. இதனால்கூட்டத்தில்சத்தம் அதிகரித்து பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

மாநகராட்சியின் கட்டிடக்கழிவுமேலாண்மை திட்டத்தில், கிழக்கு மண்டலத்தில்உள்ளசிங்கா நல்லூர் வீட்டுவசதி வாரிய பகுதிக்குகட்டிடக்கழிவுகள் கொண்டு செல்லும் திட்டம் தீர்மானமாக வைக்கப்பட்டது. ஆனால், அதிமுக கவுன்சிலர்கள் பிரபாகரன், ரமேஷ் ஆகியோர் இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ஏனெனில், அந்த இடத்தில் 960 பேருக்கு வீட்டு வசதி வாரியம் மூலமாக நில உரிமைகள் உள்ளன என்றும், அந்த இடத்தில் கழிவுகளை கொட்டுவது பொதுமக்களின் வாழ்வாதாரத்துக்கும், சுகாதாரத்துக்கும் அபாயம் ஏற்படுத்தும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்காக வரிகள் உயர்த்தப்பட்டுள்ளதையும், முன்பு இலவசமாக பயன்படுத்தப்பட்ட உள் விளையாட்டு அரங்கங்கள் தற்போது தனியாரிடம் டெண்டரில் கொடுத்து, ரூ.45 கட்டணமாக வசூலிக்கப்படுகிறதுஎன்றும் அதிமுக கவுன்சிலர்கள் குற்றம்சாட்டினர்.

அதிமுககவுன்சிலர்கள் பிரபாகரன்மற்றும்ராமேஷ் ஆகியோர், மேயரிடம்பேச அனுமதிக்கக் கோரியும், திட்டங்களை எதிர்த்து வலியுறுத்தியும்மன்றத்தின் மையத்தில் வந்து திமுக கவுன்சிலர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் கூட்டம் பரபரப்புடன்நடைபெற்றது. அச்சமயத்தில், அ.தி.மு.க., கவுன்சிலர்கள் இருவரும் மேயரின் இருக்கைக்கு முன் நின்று, குரல் எழுப்பினர். அவர்களை திமுககவுன்சிலர்கள் சுற்றி நின்று, மன்றத்தில் இருந்து வெளியேற்றினர்.

அதிமுககவுன்சிலர்கள் இருவரும், மன்ற நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்பட்டதாக கூறி, இரு கூட்டங்களுக்கு 'சஸ்பெண்ட்' செய்வதாக, மேயர் ரங்கநாயகி அறிவித்தார்.

# பேருந்து படிக்கட்டுகளில் பயணம் செய்யும் மாணவர்கள் மீது நடவடிக்கை உயர்நீதிமன்றம் உத்தரவு



தமிழ்நாட்டில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், அரசும் தனியாரும் இயக்கும் பேருந்துகளில் தினமும் பயணம் செய்து வருகின்றனர். சிலர், கூட்ட நெரிசலையோ அல்லது சாகசஉணர்வையோகாரணமாக பேருந்தின் படிக்கட்டுகளில் நின்று பயணிப்பது வழக்கமாக இருக்கிறது. இது பெரும்பாலும் விபத்துகளுக்கும்,உயிரிழப்புகளுக்கும் காரணமாகி வருகிறது.

ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் பத்திரமாக பயணம் செய்ய அறிவுரை வழங்கினாலும், பல மாணவர்கள் அதனை ஏற்காமல்வாக்குவாதத்தில் ஈடுபட்டு, பாதுகாப்பைபுறக்கணித்துபயணிக்கின்றனர். காவல்துறையினர் எச்சரித்தும், அந்த பழக்கத்தை மாற்ற மறுக்கின்றனர்.

இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு, தூத்துக்குடியைச் சேர்ந்த ராம்குமார் என்பவர் பொது நலமனு ஒன்றை சென்னை உயர்நீதிமன்றமதுரைகிளையில் தாக்கல் செய்தார். அவருடைய மனுவில், நகர்புறஅரசுபேருந்துகளில் அதிகமாணவர்கள் இலவச பாஸ்மூலம்பயணிப்பதால், பரபரப்பாகி, மாணவர்கள் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணிக்க வேண்டிய நிலை ஏற்படுவதாக கூறப்பட்டிருந்தது.


இதனைக் கருத்தில் கொண்டு, நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியன் தலைமையிலான அமர்வு இந்த வழக்கை விசாரணை செய்தது. அந்த நேரத்தில் நீதிபதி, "பள்ளி செல்லும் மாணவர்களுக்குதனித்தனி பேருந்துசேவைஏற்படுத்த வேண்டும்" எனவும், "அவர்கள்படிக்கட்டுகளில்பயணிப்பதைபாதுகாப்புமற்றும்ஒழுக்க கோணத்தில் நெருக்கமாக கவனிக்க வேண்டும்" எனவும் குறிப்பிட்டார்.

மேலும், சமீப காலங்களில்புகைமற்றும்போதை பழக்கம் மாணவர்கள் இடையே அதிகரித்து வருவதைநினைவுகூர்ந்தநீதிபதி, "அதைத் தடுக்க காவல் துறை என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?" என கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில், பேருந்துகளில் படிக்கட்டுகளில் பயணிக்கும் மாணவர்களுக்குஎதிராகநடவடிக்கை எடுக்க உயர்நீதிமன்றம் உத்தரவுபிறப்பித்துள்ளது. இது, மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், ஒரு முக்கிய முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

இதன் மூலம், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், இனி பேருந்துகளில் பாதுகாப்பாக பயணிக்க வேண்டும் என்பது பெற்றோர்களின் மட்டுமல்ல, சமூகத்தின் முழு எதிர்பார்ப்பாக இருக்கிறது.

# பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரியின் விருது வழங்கும் விழா




திி கோவை ஹெரால்டு

பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரியின் விருது வழங்கும் விழா பி.எஸ்.ஜி மருத்துவமனை கலையரங்கத்தில் காலை நடைபெற்றது.

பயன்பாட்டு கணிதம் மற்றும் கணக்கீட்டு அறிவியல் துறையின் தலைவர் ஷைனா ஷீன் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் முதல்வர் டாக்டர் கே.பிரகாசன் பேசினார். பி.எஸ்.ஜி அண்ட் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாகக் குழு மற்றும் நிர்வாக அறங்காவலர் எல். கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். தலைமை விருந்தினராக, பெர்சிஸ்டண்ட் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஆனந்த் தேஷ்பாண்டே சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து அவர் முதலிடம் பிடித்த மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களைவழங்கினார். பல்வேறு துறைகளைச் சேர்ந்த361பட்டதாரிகளுக்கு பட்டங்களை வழங்கி கவுரவித்தார்.

கல்வி, நுண்கலைகள், பொதுப் பேச்சு மற்றும் மொழித்திறன்கள்போன்ற பன்முக செயல்பாடுகளில் சிறந்து விளங்குவதற்காக குஹப்ரியன் அறக்கட்டளையின் கீழ், மின் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறையின் முன்னாள்தலைவர் டாக்டர் பி. நவநீதன் அவர்களால் நிறுவப்பட்ட புகழ்பெற்ற பன்முகத்தாள்வார் விருது எம்.எஸ்.சி சைபர் செக்யூ ரிட்டி மாணவி அஸ்விகாவுக்கு வழங்கப்பட்டது.

# 'எம்எஸ்எம்இ' தொழில் வளர்ச்சியில் 'டிஆர்டிஓ' முக்கிய பங்கு வகிக்கிறது: 'டிஆர்டிஓ' இயக்குநர் தகவல்




▸ இந்திய பட்டய கணக்காளர் நிறுவனம்(ஐசிஏஐ), இந்திய தொழில் வர்த்தக சபை(ஐசிசிஐ) சார்பில், சர்வதேச 'எம்எஸ்எம்இ' தின கருத்தரங்கு துடியலூரில் உள்ள 'ஐசிஏஐ' பவன் வளாகத்தில் நேற்று முன்தினம்(ஜூன் 27-ம் தேதி) நடந்தது. 'டிஆர்டிஓ' இயக்குநர் அருண் சவுத்ரி பேசினார்.

தேசிய அளவில் குறு, சிறுமற்றும்நடுத்தரதொழில் நிறுவனங்கள் வளர்ச்சியில் ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. என, 'டிஆர்டிஓ' இயக்குநர் அருண்சவுத்ரிதெரிவித்தார்.

இந்தியபட்டயகணக்காளர் நிறுவனம்(ஐசிஏஐ), இந்திய தொழில் வர்த்தக சபை சார்பில் சர்வதேச 'எம்எஸ்எம்இ' தின கருத்தரங்கு துடியலூரில் உள்ள 'ஐசிஏஐ' பவன் வளாகத்தில் நடந்தது.

சிறப்புவிருந்தினர்'டிஆர்டிஓ'இயக்குநர்அருண்சவுத்ரி பேசும்போது,தேசியஅளவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியில், ராணுவ ஆராய்ச்சிமற்றும்மேம்பாட்டு நிறுவனம்(டிஆர்டிஓ) பங்கு வகிக்கிறது. உற்பத்தி பணிகளுக்கு தேவையான சில உதிரிபாகங்கள் தயாரிக்க பணி ஆணைகள் மூலம் எம்எஸ்எம்இ நிறுவனங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. கரோனா பெருந்தொற்று பரவல் காலத்தில்'எம்எஸ்எம்இ'நிறுவனங்கள் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது. என்றார்.

பிஎஸ்ஜிமருத்துவமனை நுரையீரல் சிகிச்சைத்துறை மருத்துவர் வருண் பேசும்போது, தொழில்முனைவோர் தாங்கள் சார்ந்து உள்ள தொழில்துறையில் சாதிப்பதற்கு பல்வேறு தடைகளை எதிர்கொள்ள நேரிடும்.

அவற்றை தகர்த்து சாதிக்க முயற்சிகளை மேற்கொண்டுவருவது வழக்கம். இவ்வாறு தொழிலில் சாதிப்பதில்மட்டும்அதிகஅக்கறை கொண்டு செயல்படாமல் தங்களின்உடல்நலன்மீதும் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்றார்.

இந்தியதொழில்வர்த்தக சபை, கோவை தலைவர் ராஜேஷ் லுந்த், ஐசிஏஐ தென்மண்டல உறுப்பினர் ராஜேஷ் ஆகியோர் சிறப்புரைவழங்கினார். தேசியசிறு தொழில்கள் கழகத்தின் (என்எஸ்ஐசி)துணைபொது மேலாளர் பிரேம் ஆனந்த், கொடிசியா முன்னாள் தலைவர் இளங்கோ, 'சிட்பி' பொது மேலாளர் மனோஜ், எஸ்பிஐ வங்கிதுணைபொதுமேலாளர் ஹரிஹரன், லகு உத்யோக் பாரதி அமைப்பின் மாநில பொதுச்செயலாளர் கல்யாண்சுந்தரம், இந்திய தொழில்கள் கூட்டமைப்பின்(சிஐஐ)முன்னாள்தலைவர் பாலமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

எம்எஸ்எம்இ தொழில் துறை சார்ந்த பல்வேறு தலைப்புகளில்நடந்தகருத்தரங்கில் தொழில்துறை வல்லுநர்கள் பேசினர்.

# கோவையில் ஜூலை 5 அன்று இஸ்கான் தேர்த் திருவிழா

திி கோவை ஹெரால்டு



அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் (இஸ்கான்) சார்பில், ஸ்ரீ ஜெகன்னாதர் தேர்த் திருவிழா ஜூலை 5ஆம் தேதி (சனிக்கிழமை) கோவையில் நடைபெற உள்ளதாக அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஒடிசா மாநிலம் புரியில் நடைபெறும் தேர்த் திருவிழாவை ஒப்பிடும் வகையில், கோவையிலும் ஆண்டுதோறும் இஸ்கான் அமைப்பால் தேர்த் திருவிழா நடத்தப்படுகிறது. இதனையொட்டி, ஜூன் 30ஆம் தேதி, பகவான் ஜெகன்னாதர், பலதேவர் மற்றும் சுபத்ரா தேவி ஆகியோர் சிலைகளுக்கு திருமஞ்சன சேவை மற்றும் ஸ்னான யாத்திரை நடைபெறும்.

இந்த நிகழ்வு பக்தி வினோத சுவாமிகளின் தலைமையில் நடைபெறுகிறது. நாட்டின் புனித நதிகளில் இருந்து கொண்டுவரப்படும் நீர் மற்றும் மலர்களைக் கொண்டு அபிஷேகமும், ஜெகன்னாதரின் லீலைகள் மற்றும் திருமஞ்சன அபிஷேகம் குறித்து சுவாமிகள் சிறப்புரை நிகழ்த்த உள்ளனர்.

திருமஞ்சன நிகழ்ச்சியைத் தொடர்ந்து, பகவானுக்கு 1008 வகை உணவுப் படைகள் அர்ப்பணிக்கப்படும். பின்னர் பக்தர்களுக்கு பிரசாத விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

ஐதீகத்தின் படி, அபிஷேகத்திற்குப் பிறகு பகவானுக்கு உடல்நலம் குன்றும் என நம்பப்படுகிறது. எனவே, தேர்த்திருவிழா நாள்வரை பகவானுக்கு மூலிகை உணவுகள் மட்டுமே அர்ப்பணிக்கப்படும். இந்த நாள்கள் "அனாவஸர காலம்" என அழைக்கப்படுகின்றன. இந்த காலத்தில், பொதுமக்கள் தரிசனம் நிறுத்தப்பட்டு, விக்கிரங்களுக்கு முழுமையாக ஓய்வு அளிக்கப்படுகிறது.

இதனால், தேர்த் திருவிழா அன்று, பகவான் நேரடியாக தேரில் வந்து பக்தர்களுக்கு தரிசனம் அளிப்பதாகவும், இதற்காக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் இஸ்கான் நிறுவனம் தெரிவித்துள்ளது.

FOR NEWS Publication
9244317182
04223147962

# பள்ளி மாணவர்களுக்கான மாதிரி நாடாளுமன்றம் திட்டம்



திி கோவை ஹெரால்டு

இளைய இந்தியர் நாடாளுமன்றம் 2.0 என்ற இளைஞர்களுக்கானமாதிரி நாடாளுமன்றத்திட்டம் எஸ்.எஸ்.வி.எம் ஸ்கூல் ஆஃப் எக்சலன்ஸ், கோவையில் துவங்கப்பட்டது.

யங் இந்தியன்ஸ் கோயம்புத்தூர் கிளையின் தளிர் பிரிவு இதை ஏற்பாடு செய்துள்ளது. மாணவர்களுக்கு தலைமையர்மைத் திறன், குடிமை பொறுப்பு மற்றும் வாழ்க்கைத் திறன்களை வளர்க்கும் நோக்கில் இந்த நிகழ்வு நடத்தப்படுகிறது.

இந்த நிகழ்வில் மாண்புமிகு டாக்டர் பி. கணபதிராஜ்குமார், கோவை மக்களவை உறுப்பினர், சிறப்புத் தலைவராகக் கலந்துகொண்டு நிகழ்வை தொடக்கிவைத்தார். டாக்டர் மணிமேகலை மோஹந்தாஸ், நிர்வாக அறக்கட்டளை நிர்வாகி, எஸ்.எஸ்.வி.எம் நிறுவனங்கள் மற்றும் டாக்டர் மோஹந்தாஸ், அறக்கட்டளை நிர்வாகி, எஸ்.எஸ்.வி.எம் நிறுவனங்கள், ஆகியோர் விருந்தினர்களாக பங்கேற்று மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

# மருத்துவர் சங்க மண்டல கூட்டம்



அக்குபஞ்சர், பாரம்பரிய மாற்று மருத்துவ சங்க மண்டல நிர்வாகிகளின் சந்திப்புக் கூட்டம் கோவை குஜராத் சமாஜ் அரங்கில் நடைபெற்றது, விழாவில் சிறப்பு நிகழ்வாக அக்குபஞ்சர், பாரம்பரிய மருத்துவத்தின்தற்போதையநிலை, அதன் வளர்ச்சி, எதிர்கால இலக்கு ஆகியவைகள் பற்றி டாக்டர்.எம்.வித்யா, டாக்டர் பிசிவானந்தம், டாக்டர்.எஸ்.திருக்குமரன், டாக்டர் பி மகேஸ்வரி, டாக்டர் எல்.அமீர்கான் ஆகியோர் எளிமையாக பேசினர். மேலும் விழாவில் கலந்துகொண்டபலமருத்துவர்களும் அக்குபஞ்சர் மாற்று மருத்துவம் குறித்த பல்வேறு தகவல்களை பரிமாறி கொண்டனர். நமக்கு நாமே மருத்துவம் பார்த்துக் கொள்வது குறித்தும்பல்வேறுமருத்துவ முறைகளில் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வது குறித்தும் பேசினர். நிகழ்ச்சியில் டாக்டர்கள் ஜி.கார்த்திகேயன், மும்தாஜ், பாலாஜி, கவிதா மற்றும் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை கோவை மாவட்ட அமைப்பாளர் டாக்டர் அமீர்கான் செய்திருந்தார்.

# யுபிஎஸ்சி தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை

மத்திய அரசு பணியிடங்களை நாடி யுபிஎஸ்சி முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராகும் தமிழக மாணவர்களுக்கு தமிழகஅரசுஊக்கத்தொகை வழங்கும் புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு மாதம் ரூ.7,500 வீதம் 10 மாதங்கள் ஊக்கத்தொகை வழங்கப்பட உள்ளது. இதற்கான மதிப்பீட்டுத் தேர்வு ஜூலை 26, 2025 அன்று நடைபெறும் என அரசின் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

"நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் போட்டித் தேர்வுகள் பிரிவு, துணை முதல்வரால் தொடங்கப்பட்டுதமிழ்நாட்டு இளைஞர்களைமத்தியஅரசு வேலைவாய்ப்புகளுக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் பயிற்சிகள்மற்றும்பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

2023-24 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டபடி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் இணைந்து, யுபிஎஸ்சி தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு சிறந்த பயிற்சிமற்றும்தேவையான ஆதரவை வழங்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.


ஒவ்வொரு ஆண்டும், மதிப்பீட்டுத் தேர்வின் மூலம் 1,000 மாணவர்கள் தேர்வுசெய்யப்படுவார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.7,500 வீதம் 10 மாதங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

இந்த திட்டம், குறிப்பாக 2026-ம் ஆண்டு நடைபெறும் யுபிஎஸ்சி முதற்கட்டத் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களை குறிவைத்து செயல்படுத்தப்படுகிறது.

மதிப்பீட்டுத் தேர்வுக்கான ஆன்லைன் விண்ணப்பம் ஜூன் 26, 2025 முதல் தொடங்கும். விண்ணப்பிக்க கடைசி தேதி ஜூலை 10, 2025 ஆகும். தேர்வுக்கான நுழைவுச்சீட்டு ஜூலை மாதம் 3வது வாரத்தில் வெளியிடப்படும். தேர்வு ஜூலை 26, 2025 அன்று காலை 10 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி யுபிஎஸ்சி தேர்வுக்குத் தயாராகும் மாணவர்கள் https://www.naanmudhalvan.tn.gov.in என்ற இணையதளத்தில் சென்று முழுமையான தகவல்களை அறிந்து விண்ணப்பிக்கலாம். மத்திய அரசு பணிகளில் தமிழக மாணவர்கள் வெற்றிகரமாக நுழைய வழிவகுக்கும் இந்த திட்டம், உயர்நோக்கத்துடன் கல்வி பயணத்தைத் தொடர விரும்பும் இளைஞர்களுக்கான முக்கியத் தளமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இயல், இசை, நாடகத்தை வளர்த்த ஐயடிகள் காடவர்கோன்



காஞ்சி கச்சி என பல பெயர்களால் சிறப்பிக்கப்படும் காஞ்சி பல்வேறு சிறப்புமிக்க நகரமாகும். பஞ்சபூத திருத்தலத்தில் மண்ணிற்கு உரிய திருத்தலமாகும்.

நான்கு சமயங்கள் வளர்ந்ததற்கு காரணமாக இருந்தது காஞ்சி மாநகர். சைவம் தவிர பிறசமயங்களுக்கான மொழிகளுக்கு எழுத்து வடிவம் மற்றும் இலக்கணம் உருவாக்கப்பட்டதும் இக்காஞ்சி மாநகரிலேதான்.

சைவம் தவிர்த்து பிறசமயங்களுக்கானமறை நூல்கள் ஆகியவற்றை உருவாக்கியதும் மற்றும் பலஆயிரம்ஆண்டுகளுக்கு முன்னரே பல்கலைகழகம் உருவாக்கிவைத்திருந்தது என

பல்வேறு சிறப்புகளை தன்னகத்தே வைத்திருந்தமையால் சிவகாஞ்சி, விஷ்ணுகாஞ்சி, சமணகாஞ்சி, புத்தகாஞ்சி என நான்கு பகுதிகளாக வரையறுக்கப்பட்டிருந்தது காஞ்சி மாநகர்.

இத்தகைய புகழ்பெற்ற காஞ்சியினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவர்கள் வழித்தோன்றலாக உதித்தவர் ஐயடிகள் காடவர்கோன் ஆவார்.

காடவர் என்பது பல்லவ மன்னர் குலத்தினைக் குறிக்கும் பொதுப்பெயர். ஐயடிகள் என்பது ஐயனின் அடிகள் என்பதன் மருவாகும். ஐயடிகள் காடவர்கோன் என்பது ஐயனடிகளாகிய பல்லவ மன்னர் என்ற பொருளினை குறிக்கும்.

வீரத்தில் சிறந்த இவர் திறமையான ஆட்சியாளராகவும் விளங்கினார். தம்முடைய ஆட்சித் திறத்தால் குடிமக்களுக்கு வறுமை வாராமல் பாதுகாத்து வளமையான வாழ்வினை அளித்தார்.

தம்முடைய ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள எல்லா உயிர்களும் இனிது இருக்கும்படி செங்கோல் செலுத்தி, எங்கும் சைவநெறி விளங்கி இருக்கும்படி நல்லாட்சி செய்தார்.

இவர் தமிழிலும் வடமொழியிலும் பெரும் புலமை மிக்கவராக இருந்தார். இதனால் இரு மொழிகளிலும் இயல், இசை, நாடகம் உள்ளிட்ட பல கலைகளைச் சிறந்தோங்கச் செய்தார்.

சிவனிடத்தில் கொண்டிருந்த பேரன்பு நாள்தோறும் அவருக்கு பெருகிக் கொண்டே வந்தது. இதனால் அரச பதவி சிவவழிபாட்டுக்கு இடையூறாகஇருக்கும்என்ற எண்ணம் உண்டானது.

அதனால் தம்முடைய மகனுக்கு முடிசூட்டி, அரசநீதிப்படி நாடு காக்கும் பெருங்கடமையை இன்னவாறு ஆற்ற வேண்டுமென்று தம் மகனுக்கு அறிவித்து அரசாட்சியை அவன்பால் ஒப்படைத்து தாம் விரும்புகின்ற

சிவவழிபாட்டை செய்ய முற்பட்டார்.

சிவபிரான் எழுந்தருளியுள்ள திருத்தலங்களுக்கெல்லாம் சென்று சிவபெருமானை தரிசித்தார். ஒவ்வொரு சிவாலயத்திற்கும் சென்று தம்மால் இயன்ற திருத்தொண்டினைச் செய்தார்.

தமிழ்ப்புலமை படைத்தவராதலின் ஒவ்வொரு தலத்துக்கும் ஒவ்வொரு வெண்பாவைப் பாடிவழிபடும் வழக்கத்தை மேற்கொண்டார்.

அவர் பாடிய வெண்பாக்களின் தொகுப்பு 'சேத்திரதிருவெண்பா' என்ற பெயரில் தொகுக்கப்பட்டு பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் குருபூசை ஐப்பசி மாதம் மூலம் நட்சத்திரத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது.

இறைவன்பால் அன்புகொண்டு ஒழுகியமையால் இறைவனின் திருவடிபேறு பெற்றதோடு அல்லாமல் அறுபத்துமூன்று நாயன்மார்களிலும் ஒருவரானார்.

# இந்தியாவில் முதல் முறையாக ஸ்மார்ட்போன் மூலம் வாக்களிப்பு: பீகார் முன்னோடி




இந்திய தேர்தல் முறையில் ஒரு புதிய படிநிலையை உருவாக்கும் வகையில், பீகார் மாநிலம் நாட்டிலேயே முதல்முறையாக ஸ்மார்ட்போன் மூலம் வாக்களிக்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய முயற்சி, ஜூன் 28ஆம் தேதி நடைபெறஉள்ளஉள்ளாட்சி தேர்தலில் செயல்படுத்தப்படவுள்ளது என மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தற்போது இந்தியாவில் நடைமுறையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவைச் சமாளிக்க வாக்காளர்கள் நேரடியாக வாக்குச்சாவடிக்கு செல்வதுவழக்கமாக இருக்கிறது. எனினும், இந்த மின்னணுஇயந்திரங்களின் நம்பகத்தன்மையைப் பல அரசியல் கட்சிகள் கேள்விக்குள்ளாக்கி வருகின்றனர். இந்நிலையில், புதிய டிஜிட்டல் வாக்குப்பதிவு முறை, அதாவது மொபைல் செயலி மூலம் வாக்களிக்கும் நடைமுறை நாட்டில் புதிய பரிமாணமாக உருவெடுத்து வருகிறது.

இந்த திட்டத்துக்காக, மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையமான சி.டிஏசி உருவாக்கிய 'இ-வோட்டிங் எஸ்.இ.சி.பி.எச்.ஆர்.' செயலி மற்றும் பீகார் மாநில தேர்தல் ஆணையம் உருவாக்கிய மற்றொரு செயலி மூலமாக வாக்களிக்க முடியும். இந்த செயலிகளில் பிளாக்செயின் ஒருங்கிணைப்பு, முக அங்கீகாரம், நேரலை முக ஒப்பீடு, லைவ்னெஸ் liveness detection போன்ற தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வாக்களித்தவுடன் 20 வினாடிகள் வரை வாக்களித்த தகவலைப் பார்ப்பதற்கான வசதி விவிபேட் போன்று வழங்கப்படுகிறது.

இந்த முறை, வாக்குச்சாவடிக்கு நேரில் வர முடியாத புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்கள், மூத்தகுடிமக்கள் மற்றும் தீவிர நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வீட்டிலிருந்தே வாக்களிக்க வாய்ப்பளிக்கிறது. தற்போது 10,000பேர் பதிவுசெய்துள்ள நிலையில், மொத்தம் 50,000 வாக்காளர்கள் இந்த புதிய முறையை பயன்படுத்த முடியும் என மாநில தேர்தல் ஆணையர் தீபக் பிரசாத் தெரிவித்தார்.

ஒரு ஸ்மார்ட் போனில் அதிகபட்சமாக இரு வாக்காளர்கள் பதிவு செய்யலாம். மேலும், பதிவுசெய்யப்பட்ட அதே சாதனத்தில் இருந்தே வாக்களிக்க முடியும். முன்னிலையில் உள்ள கேமராவைக் கொண்ட போன்கள் மட்டுமே இந்த செயலியைப் பயன்படுத்த முடியும்.

வாக்குப் பதிவைச் செய்யும் முறை மிகவும் எளிமையானது. தேர்தல் நாளில், செயலியில் "வோட்" என்பதைத் தேர்வு செய்து, வழிகாட்டுதல்களை கவனமாக வாசிக்க வேண்டும். அதன் பிறகு, வாக்காளர் அடையாள எண் மற்றும் மொபைல் எண்ணை உள்ளீடு செய்து 'சப்மிட்' என்பதை தேர்வுசெய்ய வேண்டும். சோதனை முடிந்ததும் "டிவைஸ் ஆதிண்டிகேடட்" என்ற செய்திவரும். பின்னர் வாக்காளர் நேரலை செல்பி எடுத்து சமர்ப்பிக்க வேண்டும். முகம் உறுதி செய்யப்பட்டதும் வேட்பாளர் பட்டியலில் விருப்பமான வேட்பாளரின் பெயருடன் "கவோட்" என்பதை கிளிக் செய்து வாக்களிக்கலாம். வாக்களிப்பின் முடிவாக 20 வினாடிகளுக்கு யாருக்கு வாக்களித்தோம் என்பது திரையில் காணப்படும், மேலும் ஒருகுறுஞ்செய்தியும் பெறப்படும்.

முன்னதாகவே, முக அங்கீகார அமைப்பு, வாக்கு எண்ணிக்கைக்கான ஓசியார் மற்றும் ஈவிஎம்களை பாதுகாக்கும் வகையில் டிஜிட்டல் பூட்டு போன்ற பல நவீன தொழில்நுட்பங்களை பீகார் மாநில தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முயற்சி, இந்திய வாக்குப்பதிவுத் துறையில் டிஜிட்டல் மாற்றத்துக்கான ஒரு முக்கிய கட்டமாக பார்க்கப்படுகிறது.

# அருப்புக்கோட்டையில் ராம்ராஜ் காட்டன் புதிய ஷோரூம் திறப்பு




ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் புதிய ஷோரூமை அருப்புக்கோட்டையில் தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், ஷோரூமை திறந்துவைத்து முதல் விற்பனையை துவக்கிவைத்தார். கோமதி சிறப்பு மருத்துவமனை டாக்டர் எஸ்.எஸ்.ரவிசங்கர், டாக்டர், சித்ரா ரவிசங்கர், மற்றும் பங்கஜம் குரூப்ஸ், வி. ராஜ்குமார் ஆகியோர் மங்கள விளக்கு ஏற்றி வைத்தனர். ஜெயா ரோடுவேய்ஸ், உரிமையாளர் எம். ஜெயகுமார், மற்றும் குயின்ஸ் குரூப் ஆஃப் கம்பெனிஸ் ஆர்.தங்கபாண்டியன் ஆகியோர், முதல் விற்பனையைப் பெற்றுக் கொண்டனர் விழாவிற்கு வந்திருந்தவர்களை ராம்ராஜ் காட்டன் இணை நிர்வாக இயக்குநர் எஸ். அஸ்வின் வரவேற்றார்.

# பிளாஸ்டிக் இல்லா பேனா கேரளா மாணவி சாதனை



சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கத்தில், பிளாஸ்டிக் இல்லாத புதிய வகை பேனாவை கேரளாவைச் சேர்ந்த ஒரு மாணவி கண்டுபிடித்து பெரும் பாராட்டை பெற்றுள்ளார்.

இடுக்கி மாவட்டத்தில் தொடுபுழா அருகே உள்ள மூலமட்டம் பகுதியைச் சேர்ந்த அமலா (25), தனியார் கல்லூரியில் பி.ஏ. இறுதி ஆண்டில் படித்து வருகிறார். இன்று நாம் பயன்படுத்தும் பெரும்பாலான பேனாக்கள் மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் பொருட்களால் ஆனவை என்பதைக் கவனித்த அமலா, இயற்கைக்கு உகந்த, பிளாஸ்டிக் இல்லாத பேனாவை உருவாக்கும் முயற்சியில் இறங்கினார்.

தனது ஆராய்ச்சி முயற்சியின் பலனாக, அவர் சுற்றுச்சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் புதிய பேனாவை உருவாக்கியுள்ளார். இந்த பிளாஸ்டிக் இல்லா பேனாவிற்கு அரசு தகுதி சான்றிதழ் வழங்கியுள்ளது. மேலும், அவரது கண்டுபிடிப்பை மதித்து, ரூ.2 லட்சம் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

அமலா, ரூ.15 மற்றும் ரூ.20 விலையில் இரண்டு வகையான பேனாக்களை உருவாக்கியுள்ளார். இந்த புதிய பேனாக்கள் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன.

# உடல் எடையைக் குறைக்கும் "வெகோவி" மருந்து இந்தியாவில் அறிமுகம்



இன்றைய விரைவு உலகில், பலர் வீட்டிலிருந்தோ அலுவலகத்தில் இருந்தோ உட்கார்ந்தபடியே பணியாற்றுகின்றனர். தொடர்ந்து உடலிழக்காமல் அமர்ந்து வேலை செய்வதால், உடல்எடை அதிகரித்து ஒபிசிசிட்டி நிலையை அடைவது வழக்கமாகி வருகிறது. இதனால் பலர் மணிக்கணக்காக உடற்பயிற்சி மையங்களில் கடுமையாக பயிற்சி செய்தாலும், எதிர்பார்த்த அளவில் எடை குறையவில்லை என்ற ஏக்கத்துடன் தவிக்கின்றனர்.

இந்த சூழலில், இந்தியாவில் புதிய ஒரு மருந்து எடை இழப்பிற்கான தீர்வாக அறிமுகமாகியுள்ளது. டேனிஷ் மருந்து நிறுவனமான நோவோ நோர்டிஸ்க் தயாரித்துள்ள 'வெகோவி' எனும் மருந்து தற்போது இந்திய சந்தையில் கிடைக்கிறது. இந்த மருந்தை வாரத்திற்கு ஒரு முறை ஊசி மூலம் செலுத்தவேண்டும். இதன் ஆரம்ப விலை ரூ. 17,345 இருந்து தொடங்கி, அதிகபட்சமாக ரூ. 26,015 வரை இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெகோவி மருந்து, உடல் பருமன் குறியீடு 30-க்கும் மேல் உள்ளவர்களுக்கோ அல்லது 27-க்கும் மேல் பிஎம்ஐ-யுடன் உடல்நிலை பிரச்சனைகள் உள்ளவர்களுக்கோ பரிந்துரைக்கப்படுகிறது. இந்த மருந்து 0.25 mg முதல் 2.4 mg வரை ஐந்து அளவுகளில் கிடைக்கிறது. நோயாளிகள் மருத்துவரின் ஆலோசனைப்படி மட்டுமே இந்த மருந்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதேசமயம் இது நாள்பட்ட எடை மேலாண்மை மற்றும் இருதய நோய்கள் போன்ற முக்கிய உடல்நிலை பிரச்சனைகளை கட்டுப்படுத்தும் தீர்வாக அமையக்கூடும் என்றும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் எடை குறைக்கும் மருந்துகளுக்கான தேவை அதிகம் இருப்பினும், வெகோவியின் விலை காரணமாக இது பெரும்பாலானோர் அணுக முடியாத மருந்தாக இருக்கலாம் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது பணக்காரவர்க்கத்திற்கே மட்டுமே ஏற்கும் மருந்தாக இருந்துவிடக் கூடும் என சிலர் குறிப்பிடுகின்றனர்.

இதனை ஒப்பிடும் வகையில், அமெரிக்காவை சேர்ந்த எலி லில்லி நிறுவனம் தயாரித்துள்ள மோஞ்சாரோ மருந்தின் மாத விலை ரூ. 14,000 முதல் ரூ. 17,500 வரை உள்ளதாக கூறப்படுகிறது. தற்போது இந்தியாவில் எடை குறைப்பு மருந்து சந்தையின் மதிப்பு சுமார் ரூ.600 கோடி என்று கணிக்கப்படுகிறது.

# "கூமாப்பட்டி" இணையத்தில் வைரல் பொதுப்பணித்துறையினர் எச்சரிக்கை



சமூகவலைதளங்களில் "கூமாப்பட்டி" என்ற கிராமம் சமீபநாட்களாகட்ரெண்டாகி வரும் நிலையில், பொதுப்பணித்துறை அதிகாரிகள் மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு முக்கிய எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்களில், dark_night_tn84 என்ற கணக்கை இயக்கும் ஒரு இளைஞர், கூமாப்பட்டி கிராமத்தின் இயற்கை அழகு, நிலம், தண்ணீர், மூலிகைகள் ஆகியவற்றை பாராட்டி வீடியோக்கள் வெளியிட்டுள்ளார்.

"கூமாப்பட்டிக்கு வாங்க", "கூமாப்பட்டி தனி தீவு", "கூமாப்பட்டி தண்ணீர் சர்பத் மாதிரி இருக்கும்" போன்ற சுலோகங்களுடன் உள்ள இந்த வீடியோக்கள் வைரலாகி, Koompatti என்ற ஹேஷ்டேக் ட்ரெண்டாகியுள்ளது.

வீடியோவில் காட்டப்படும் பசுமை நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைக் காட்சிகள் பலரையும் ஈர்த்து, உண்மையில் இவ்வாறான இடம் தமிழ்நாட்டில் உள்ளதா எனும் ஆர்வத்துடன் பலர் கூமாப்பட்டி நோக்கி பயணம் மேற்கொள்கின்றனர். கூமாப்பட்டி, விருதுநகர் மாவட்டத்தின் ஸ்ரீவில்லிபுத்தூரை அருகில் உள்ள கிராமமாகும்.

இது மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில், பிளவக்கல் அணை அருகில் அமைந்துள்ளது. ஆனால், தற்போது அந்த பகுதியில் காணப்படும் நீர்நிலைகள் வறண்ட நிலையில் உள்ளதாகவும், வீடியோவில் காணப்படும் காட்சிகள் பழையவை என்றும், அந்த ஊரிலுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், பிளவக்கல் அணையில் குளிக்கவோ, மீன்பிடிக்கவோ தடை விதிக்கப்பட்டிருப்பதால், சுற்றுலா பயணிகள் அங்கு சென்று ஏமாற வேண்டாம் எனவும், பாதுகாப்பு காரணங்களுக்காக கட்டுப்பாடுகள் கடைபிடிக்கப்படுவதை நினைவில் கொள்ள வேண்டும் எனவும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

# ஐஆர்சிடிசி அறிமுகப்படுத்திய ஆஸ்க்டிஷா 2.0 ரயில் பயணத்துக்கு ஏஐ உதவியுடன் சாட்பாட் சேவை

இந்திய ரயில்வேக் கட்டணக் கழகம் தனது பயணிகள் சேவையை மேம்படுத்தும் நோக்கத்தில், ஏஐ அடிப்படையிலான புதிய சாட்பாட் வசதி ஆஸ்க்டிஷா 2.0-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய அம்சத்தின் மூலம் பயணிகள் ரயில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யவும், ரத்து செய்யவும் மற்றும் பணத்தைத் திரும்பப் பெறவும் எளிதாக முடியும்.

ஆஸ்க்டிஷா2.0என்பது செயற்கைநுண்ணறிவால் இயக்கப்படும் ஒரு சாட்பாட் ஆகும். பயணிகள் இனி பேச்சு மூலமாகவே தங்களது தேவைகளைத் தெரிவித்து, சில கிளிக்குகளில் டிக்கெட்டை முன்பதிவுசெய்ய முடியும். பயண தேதி மற்றும் இடம் போன்ற விவரங்களைச் சொல்லும் போது, சாட்பாட் வழிகாட்டி பணிகளை எளிதாக்கும். பயண திட்டம் மாற்றமடைந்தால், டிக்கெட்டை ரத்துசெய்யும் செயல்முறையும் மிகவும் எளிமையாக உள்ளது. சாட்பாட் வழிகாட்டும் படி நடைமுறை செய்யலாம். மேலும், பணத்தைத் திரும்பப் பெறும் நிலை குறித்து PNR எண்ணை உள்ளிடுவதன் மூலம் உடனடி தகவலைப் பெற முடியும்.

இந்த சேவையை பயன்படுத்த, பயணிகள் ஐஆர்சிடிசி வலைத்தளத்திற்கு சென்று முகப்புப் பக்கத்தில் உள்ள chatbot விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும். முன்பதிவு, ரத்து, பணம் திரும்பப்பெறும் நிலை, ரயில் தகவல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் இங்கு வழங்கப்படுகின்றன.

ஆதார் அல்லது பான் கார்டு விவரங்கள் அவசியமானவை. ஆன்லைன் கட்டணத்தை செலுத்திய பிறகு, டிக்கெட் பயணியின் மொபைல் எண்ணுக்கு அனுப்பப்படும். இந்த சேவை 24x7 செயல்படும், எனவே பயணிகள் எந்த நேரத்திலும் அதை பயன்படுத்தலாம்.

ஆஸ்க்டிஷா 2.0-இன் முக்கிய நன்மையாக, நேரத்தை மிச்சப்படுத்துவது மற்றும் தொந்தரவை குறைப்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, முதல் முறையாக ரயில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்பவர்களுக்கு இது ஒரு பயனுள்ள கருவியாக அமைகிறது.

இந்த சாட்பாட் வசதி தற்போது இந்தியா முழுவதும் உள்ள அனைத்து ஐஆர்சிடிசி பயனர்களுக்கும் கிடைக்கிறது, எனவே இந்தியா முழுவதும் உள்ள பயணிகள் இப்புதிய வசதியை அனுபவிக்கலாம்.

# இந்தியாவில் உருவான புதிய கார்பைன் துப்பாக்கி சமையல் குக்கரை விட குறைவான எடை




இந்தியாவின் பாதுகாப்புத் துறையில் முக்கிய முன்னேற்றமாக, நெருக்கமான போர் சூழல்களுக்கு ஏற்றதாக ஒரு புதிய கார்பைன் துப்பாக்கி டிஆர்டிஓ மற்றும் பாரத் ஃபோர்ஜ் நிறுவனத்தால் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. சமையல் பிரஷர் குக்கரை விட குறைவான எடை கொண்ட இந்த துப்பாக்கி, நகர்புற போர் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பெரிதும் உதவக்கூடியதாக இருக்கிறது.

இந்த 5.56x30 மிமீ கார்பைன், பூனேவிலுள்ள ஆயுத ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தனியாரான பாரத் ஃபோர்ஜின் கூட்டுத் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. இது, 2022-இல் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்த 4.25 லட்சம் கார்பைன் துப்பாக்கிகள் உற்பத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இதன் முக்கிய அம்சங்கள்: (எடை) சுமார் 3.3 கிலோ .ஒரு சமையல் குக்கருக்கு சற்றே குறைவாக. (வெளிச்சம்) 200 மீட்டர் தூரம் வரை தாக்கம் அளிக்கக்கூடிய திறன்

வகை: நேடோ மற்றும் இன்சாஸ் தரத் துப்பாக்கி குண்டுகளை பயன்படுத்தக்கூடியது. இந்த துப்பாக்கி குறுகிய இடங்களிலும் எளிதாக இயக்கக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. கட்டிடங்களுக்குள் நடத்தப்படும் சோதனைகள், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் நகர்ப்புற போர் சூழ்நிலைகளில் இது மிகுந்த பயனளிக்கும். இந்தியாவில் உருவாகும் இந்த புதிய கார்பைன், 'ஆத்மநிர்பர் பாரத்' (சுயநினைவு இந்தியா) நடவடிக்கையின் ஒரு முக்கிய அடித்தளம் என்பதோடு, பொது-தனியார் கூட்டிணைப்பு மூலமாக பாதுகாப்பு உற்பத்தி துறையில் இந்தியா மேற்கொண்டுள்ள வளர்ச்சி மற்றும் திறன்திறந்த முன்னேற்றத்தையும் பிரதிபலிக்கிறது.

## கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் 18ஆவது பட்டமளிப்பு விழா




தி கோவை ஹெரால்டு

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் 18ஆவதுபட்டமளிப்புவிழா கல்லூரிவளாகத்தில்உள்ள முனைவர்மாரப்பகவுண்டர் ஆறுச்சாமி கலையரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் விண்வெளிக் குழுவின்உறுப்பினருமான பத்மஸ்ரீ ஏ.எஸ் கிரண் குமார் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பட்டதாரிகளுக்குப் பட்டங்களை வழங்கிப் பட்டமளிப்பு விழா சிறப்புரையாற்றினார்.

அவர்தம் உரையில், உங்களுடைய முயற்சி, ஆசிரியர்களின் வழிகாட்டுதல்,பெற்றோர்களின் வாழ்த்துக்கள் இந்த மூன்றும் இணைந்ததன் விளைவே இன்று நீங்கள் பெறவிருக்கும் பட்டம் என்று குறிப்பிட்டார். இந்தியாவின் விண்வெளி சாதனைகளையும் விஞ்ஞானி விக்ரம் சாராபாயின் தொலைநோக்குப் பார்வையையும் நினைவுகூர்ந்தார். விண்வெளி ஆய்வுகளின் தொடக்க காலத்தில் இந்தியா சில பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்ததை எடுத்துரைத்து, அறிவியல் தொழில்நுட்பத்தில் ஏற்படுகின்ற தாமதமான வளர்ச்சியானது.

இதுவரையில் யாரும் கண்டறியாத புதிய கண்டுபிடிப்புகளையும் சாதனைகளையும் செய்ய வழிவகுக்கும் என்றும் 2035 ஆம் ஆண்டு வானில் இந்தியாவின் விண்வெளி நிலையம் அமையும் என்றும் உறுதிபடக் கூறினார். சவால்களை எதிர்கொள்ளாமல் சாதனைகளைச் செய்ய முடியாது என்றும் தோல்வி ஏற்படும் போது அதற்கானகாரணத்தையும் அதிலிருந்துமீள்வதற்கான வழியையும் ஆராய்ந்தால் வெற்றி பெறுவது நிச்சயம் என்றும் கூறி, உங்கள் வெற்றியேநாட்டின்வெற்றி" என்று பட்டதாரிகளிடம் குறிப்பிட்டார்.

முன்னதாகக் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ. வாசுகி தலைமையுரையாற்றினார். அவர்தம் தலைமையுரையில், "மேற்கத்திய நாடுகள் இந்தியாவின் அறிவியல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை உணர்ந்துள்ள தருணம் இது என்றும் நாட்டுக்கும் மக்களுக்குமான பொற்காலம் என்று குறிப்பிட்டார். நமது நூறாவது சுதந்திர நாளில் பாரதம் உலக அரங்கில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கும் என்றும் அதற்கு இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாதது" என்று குறிப்பிட்டார்.

பட்டமளிப்பு விழா நிகழ்வைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் வே. சங்கீதா தொடங்கி வைத்தார். இப்பட்டமளிப்பு விழாவில் இளநிலை மற்றும் முதுநிலைத் தேர்வுகளில் தரவரிசைப் பெற்ற 12 பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. பின்னர் இளநிலை பட்டதாரிகள் 834 பேருக்கும் முதுநிலைபட்டதாரிகள் 211 பேருக்கும் பட்டங்களை வழங்கப்பட்டது.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



தி கோவை ஹெரால்டு

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் போதைப்பொருள் தடுப்புக்குழு, கோவை மாநகர காவல்துறை, நாட்டு நலப்பணித்திட்டம் ஆகியவை,யுவாகிளப்புடன் இணைந்து நடத்திய போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி, கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் தலைமை வகித்தார். ஆனமலைஸ் டொயோட்டோ இயக்குநர் சௌமியா காயத்ரி, ஆர்த்தோ ஒன் இயக்குநர் கரோலின் ராஜன், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை காவல் ஆய்வாளர் எம். கே.சரவணன் ஆகியோர் சிறப்புஅழைப்பாளர்களாக கலந்து கொண்டு, போதைப்பொருட்களின் தீமை குறித்து மாணவர்களுக்குவிளக்கிக் கூறினர்.

அதைத்தொடர்ந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்ற மாபெரும் போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் பேராசிரியர்கள், மாணவர்கள் திரளாகப் பங்கேற்று உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். ஆயிரக்கணக்கான மாணவர்கள் "நோ ட்ரக்ஸ்" என்ற வடிவில் அமர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

பின்னர் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவிகளின் போதைப்பொருள் விழிப்புணர்வு நாடகம் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. முன்னதாக யுவா கிளப் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜினி எம். ஜேம்ஸ் வரவேற்றார்.

முடிவில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் ஆர்.நாகராஜன் நன்றி கூறினார்.

## திருவாசக முற்றோதல் பெருவிழா



அருள்திரு மாணிக்கவாசகப் பெருந்தகையின் குருபூஜை விழா இன்று உலகம் முழுவதும் வணங்கப்படுகிறது. இதனையொட்டி, திருக்கழுக்குன்றம் தாமோதரன், பழனி ராஜம்மாள் சங்கரன் ஆகியோர் முன்னின்று நடத்தும் திருவாசக முற்றோதல் இன்று (29) சரவணம்பட்டி எஸ்.எம்.எஸ். மஹாலில் காலை 6.00 மணி முதல் தொடங்குகிறது. பேரூராதீன சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் குமரகுருபர சுவாமிகள், தென்சேரி ஆதீனம் முத்து சிவராமசாமி அடிகளார் உள்ளிட்டோர் ஆசி வழங்குகின்றனர்.

விழாவில்,கோவையில் உள்ள அனைத்து சிவனடியார்கள், திருமுறை ஆசிரியர்கள், ஒருங்கிணைந்த சிவனடியார்கள் கூட்டத் தலைவர் ஆ.வெ.மாணிக்கவாசகம் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.



விழாவிற்கான ஏற்பாடுகளை சிவப்பணித் தொண்டர் அன்னூர் இ.பழனிசாமி செய்துள்ளார்.

## பெண்களுக்கு மின்சார ஆட்டோக்கள் வழங்கிய வனிதா மோகன்




கோவை ஸ்பெக்ட்ரம் ரோட்டரி கிளப்பின் தலைமையில் நடைபெற்ற "சிங்கப்பெண்ணே" மின்சார ஆட்டோ வழங்கும் விழாவில் பிரிக்கால் லிமிடெட், தலைவர் மற்றும் சிறுதுளி அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் வனிதா மோகன் பெண்களுக்கு மின்சார ஆட்டோக்கள் வழங்கினார். உடன் ரோட்டரி கோயம்புத்தூர் ஸ்பெக்ட்ரம் சங்க தலைவர் ரோட்டேரியன் சி.அசோகன்.

## டாக்டர் என். ஜி. பி. கலை அறிவியல் கல்லூரியில் "நமக்கு வேண்டாம்" போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்வு

தி கோவை ஹெரால்டு




டாக்டர் என். ஜி. பி. கலை அறிவியல் கல்லூரியில் யங் இந்தியன்ஸ், யங் இந்தியன் ஹெல்த் மற்றும் யுவா கிளப் இணைந்துநடத்தும் "நமக்கு வேண்டாம்" என்னும் தலைப்பில் போதைப் பொருள்இல்லாகோவையை உருவாக்கிட அதற்கான விழிப்புணர்வு நிகழ்வு என். ஜி. பி. கலையரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்கள் அனைவராலும் குத்து விளக்கேற்றப்பட்டு இந்த நிகழ்வு தொடங்கப்பட்டது. கல்லூரியின் முதல்வர் முனைவர் சு. சரவணன் வரவேற்புரை வழங்கினார். டாக்டர் என். ஜி. பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி, டாக்டர் என். ஜி. பி. கல்விக் குழுமங்களின் அறங்காவலர் அருண் என் பழனிசாமி, டாக்டர் என். ஜி. பி. கல்விக் குழுமங்களின் இயக்குனர் மதுரா அருண் பழனிசாமி, டாக்டர் என். ஜி. பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் முதன்மை செயல் அலுவலர் முனைவர் ஓ. டி. புவனேஸ்வரன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். டாக்டர் என். ஜி. பி. கல்விக் குழுமங்களின் செயலர் மருத்துவர் தவமணி தேவி பழனிசாமி வாழ்த்துரை வழங்கினார்.

யங் இந்தியாவின் உறுப்பினர் சிவசங்கர் மற்றும் சஞ்சீவ்பத்ரி, சங்கர் ஐ. ஏ. எஸ். அகடெமியின் நிறுவனர் ஆர். எஸ். அருண் கல்லூரியில் மாணவர்கள் சார்பாக இளங்கலை இரண்டாம் ஆண்டு மாணவர் சஞ்சய் கிறிஸ்டோபர் மற்றும் இளங்கலை மூன்றாமாண்டு மாணவி எஸ்.ஆர்.திவ்யா இருவரும் போதைப்பொருளின் தீமை குறித்து உரையாற்றினர். கல்லூரியில் இளங்கலை மாணவர் தரனேஷ் போதைப்பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியையும் நன்றியுரையையும் வழங்கினார்.

## 24-வது கோடை கால தடகள பயிற்சி முகாமின் தடகள போட்டிகள் அம்ருத் ஆர்கானிக்ஸ் சிஇஓ ராஜேஷ் பரிசு வழங்கினர்

கோவை அத்லெடிக் கிளப் தனது வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் கோடை கால பயிற்சி முகாம்களில் கலந்துகொண்ட தடகளவீரர்,வீராங்கனைகளுக்குகடந்த 23 ஆண்டுகாலமாக தடகள போட்டிகளை நடத்தி வருகிறது. 24-வது கோடை கால தடகள பயிற்சி முகாமின் தடகள போட்டிகள் கோவை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில்அம்ருத்ஆர்கானிக்ஸ் நிறுவன தலைமை செயல் அதிகாரி கே.ராஜேஷ் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். இவ்வாண்டு நடைபெற்ற போட்டிகளில் 8 வயது முதல் 19 வயது வரையிலான 1200-க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள் கலந்துகொண்டனர். இதில், ஓட்டம், நீளம் தாண்டுதல், குண்டுஎறிதல், மும்முறை தாண்டுதல் உள்ளிட்ட ஏராளமான விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றன.






இறுதியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், அம்ருத் ஆர்கானிக்ஸ் நிறுவன தலைமை செயல் அதிகாரி கே.ராஜேஷ், சிடிஏஏ துணைத்தலைவர் சரவணகாந்தி,உள்ளிட்டசிறப்புவிருந்தினர்கள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவீரர்வீராங்கனைகளுக்கு சான்றிதழ்களையும் பரிசு பொருட்களையும் வழங்கினர்.



### அவிநாசி மேட்டுப்பாளையம் சாலையில் வெட்டப்படும்

# 470 மரங்களுக்கு பதிலாக 4770 மரங்கள் நடவேண்டும் பசுமை தீர்ப்பாயம் உத்தரவு





கோவை அவிநாசி மேட்டுப்பாளையம் வழியாக சுமார் 38 கிலோமீட்டர் நீளத்தில் உள்ள இரண்டுவழிசாலை, நாள்தோறும் 22,000 வாகனங்கள் பயணிக்கும் முக்கிய பாதையாக இருந்து வருகிறது. குறிப்பாக விசேஷ மற்றும் பொதுநாட்களில் இந்த சாலையில் போக்குவரத்து நெரிசல்மிக அதிகமாகிறது.

சாலை வெறும் 7 மீட்டர் அகலமுள்ளதாக இருப்பதால் வாகனங்கள் ஒருவரையொருவர் முந்தும் போது விபத்து ஏற்படும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதைத் தவிர்க்கும் வகையில், "முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுதிட்டத்தின்" கீழ் இந்தசாலையைநான்குவழி நெடுஞ்சாலையாக மேம் படுத்தும்திட்டத்தைதமிழக நெடுஞ்சாலை துறை மேற்கொண்டு வருகிறது.

திட்டத்தின்படி, இந்த சாலை 13 கி.மீ. திருப்பூர் மாவட்டத்திலும், 25 கி.மீ. கோவை மாவட்டத்திலும் அமைந்துள்ளது. இதற்காக தமிழக அரசு ₹238 கோடி நிதி ஒதுக்கியுள்ளதுடன், நிலம் கையகப்படுத்தும் பணிகள் துவங்கி விட்டன.

இந்நிலையில், அவிநாசி அன்னூர் வழியாக அமைந்துள்ள பகுதிகளில் 470 மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. மேலும் மேட்டுப்பாளையம் அன்னூர் சாலை பகுதியில் 1342 மரங்கள் அகற்றப்படும் என்றும், மீதமுள்ள 262 மரங்களை வேறு இடத்தில் மறு நடவு செய்யும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, நாளிதழ் செய்தி அடிப்படையில், பசுமை தீர்ப்பாயம் தாமாக முன்வந்து விசாரணையை துவக்கியது. விசாரணையில், மரங்களை வெட்ட தமிழக நெடுஞ்சாலைத் துறை அனுமதிபெற்றதா? என்பது உள்ளிட்ட கேள்விகள் எழுந்தன. நெடுஞ்சாலைத் துறை அளித்த அறிக்கையில், மாவட்ட பசுமை குழுவின் அனுமதி பெற்றதாகவும், மரங்களை வெட்டுவது சட்டப்படி நடந்திருப்பதாகவும் கூறப்பட்டது.

தொடர்ந்து, பசுமை தீர்ப்பாயத்தின் நீதிபதி புஷ்பா சத்யநாராயணா மற்றும் நிபுணர் உறுப்பினர் சத்தியகோபால் தலைமையில் நடைபெற்ற விசாரணையில், இந்த சாலை 7 மீட்டரிலிருந்து 16.2 மீட்டராக விரிவடைவதால், போக்குவரத்து நெரிசல் குறையும், அதனால் பகுதி வளர்ச்சி பெறும் என நெடுஞ்சாலைத் துறை தெரிவித்தது.

இருப்பினும், தீர்ப்பாயம் வலியுறுத்தியது: வளர்ச்சி நடவடிக்கைகள் சுற்றுசூழல் சமநிலையைப் பாதிக்கக் கூடாது. எனவே, 470 வெட்டப்பட்ட மரங்களுக்கு பதிலாக 4770 புதிய மரங்கள் நடப்பட வேண்டும் என்றும், அதை இரண்டு பருவ காலங்களுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்றும் உத்தரவு வழங்கப்பட்டது.

மேலும், அந்த மரங்களை குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் அல்லது அவை வளர்ந்துவரும் வரை வேலி அமைத்து, தண்ணீர் பாய்ச்சி பராமரிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது. இந்த மரங்கள் உள்நாட்டு வகை மரங்களாக இருக்க முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இத்துடன், வெட்டப்பட்ட மற்றும் நடப்பட்ட மரங்கள் தொடர்பான புவிசார் குறியீடுகள், அவற்றின் தற்போதைய நிலை ஆகியவற்றை நெடுஞ்சாலைத் துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் பசுமை தீர்ப்பாயம் கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளது.

# கோவையில் தொடங்கிய ஜெமினி கிராண்ட் சர்க்கஸ்





தி கோவை ஹெரால்டு

கோவையில் தனக்கென தனி ரசிகர் பட்டாளத்தை கொண்டுள்ள ஜெமினி கிராண்ட் சர்க்கஸ் கோவை வ.உ.சி மைதானத்தில், (ஜூன் 27) அன்று துவங்கியது.

கோவை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், திமுக கோவை மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் ஆகியோர் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். திமுக வழக்கறிஞர் கோவை கி.கணேஷ்குமார், திமுக மாவட்டத் துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், கோவை மாநகராட்சி மத்திய மண்டலத் தலைவர் மீனா லோகு, இயற்கை தாரா ஷபி, மாமன்ற உறுப்பினர் சுமா விஜயகுமார் ஆகியோர் இந்த துவக்க நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

ஜெமினி கிராண்ட் சர்க்கஸ் ஆகஸ்ட் 4 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதில், நண்பகல் 1 மணி, மாலை 4 மணி, இரவு 7 மணி என மொத்தம் தினசரி மூன்று காட்சிகள் இடம்பெறுகின்றன. இந்த காட்சிகளுக்கான கட்டணம், ரூ.150, ரூ.250, ரூ.350, ரூ.500 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

துவக்க நிகழ்ச்சியில், சர்க்கஸ் கலைஞர்கள் அந்தரத்தில் தொங்கும் ஊஞ்சலை பிடித்தபடி தாவி பல்டி அடித்து அசத்திய ஊஞ்சல் விளையாட்டு பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற, ஆப்பிரிக்க சர்க்கஸ் கலைஞர்களின் சாகசங்களும், சுழலும் மேடையில் சிலை போல் நின்ற பெண் சர்க்கஸ் கலைஞர்களும் பார்வையாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

மேலும், பார்வையாளர் களின் கவனத்தை வெகுவாக ஈர்க்கக்கூடிய, அமெரிக்கன் ரிங் ஆப் டெத், குளோப் மோட்டார் சைக்கிள், ரஷியன் ஸ்டிக் பேலன்ஸ், ஸ்பிரிங் நெட், ஸ்விங்கிங் அக்ரோபேட், ரஷியன் ரோப் பேலன்ஸ் சைக்கிள் அக்ரோபாட்டிக்ஸ் ஆக்ட் போன்ற ஏராளமான சாகசங்கள் இதில் இடம்பெறுகின்றன.

இது குறித்து ஜெமினி சர்க்கஸ் நிர்வாக இயக்குனர் அஜய் சங்கர் கூறியது ஜெமினி சர்க்கஸ் 1951 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது சுமார் 75 ஆண்டுகள் அனைவரையும் மகிழ்வித்து இதில் பங்குபெறும் கலைஞர்கள் ஆப்பிரிக்கா மற்றும் ரஷ்யா கலைஞர்கள் உள்பட நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்கு பெற்று திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர் கசர்க்கஸை காண வரும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் மகிழ வைத்து வருகிறது இந்த ஜெமினி ஜெமினி கிராண்ட் சர்க்கஸ் என்றார் உடன் சர்க்கஸ் ஒருங்கிணைப்பாளர் ஹாஜி பவித்ரன் விழா ஏற்பாடுகளை மக்கள் தொடர்பு அலுவலர் சுபாஷ் சுப்பிரமணியன் செய்து வருகிறார்.

## ஜூலை 7 முதல் பொறியியல் படிப்புகளுக்கான கவுன்சிலிங் தொடக்கம்

பொறியியல் படிப்புகளுக்கு தரவரிசை பட்டியலை, அமைச்சர் கோவி. செழியன் வெளியிட்டார். ஜூலை 7 முதல் கவுன்சிலிங் தொடங்குகிறது.

சென்னை அண்ணாபல்கலையின் கீழ், 463 பொறியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. 2025- 26ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கு, ஆன்லைன் விண்ணப்ப பதிவு நடந்தது. இதில், 3 லட்சத்து 2,374 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில், 2 லட்சத்து 49,883 மாணவர்கள் விண்ணப்ப கட்டணம் செலுத்தி உள்ளனர்; 2 லட்சத்து 26,359 மாணவர்கள் சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்து உள்ளனர்.

இந்நிலையில் பொறியியல் படிப்புகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது. பொறியியல் படிப்புக்கான பொதுப்பிரிவு கவுன்சிலிங் ஜூலை 14ம் தேதி தொடங்குகிறது. ஆகஸ்ட் 17ம் தேதி முடிவடைகிறது. சிறப்புப்பிரிவு மாணவர்களுக்கான கவுன்சிலிங் ஜூலை 7ம் தேதி முதல் ஜூலை 11ம் தேதி வரை நடைபெறுகிறது. துணைப் பிரிவு கவுன்சிலிங் ஆகஸ்ட் 21ம் தேதி முதல் ஆகஸ்ட் 23ம் தேதி வரை நடக்கிறது.

தரவரிசை பட்டியலை வெளியிட்ட பின் உயர்கல்வி துறை அமைச்சர் கோவி.செழியன் கூறியதாவது: 200க்கு 200 என்ற கட் ஆப் எடுத்த மாணவர்கள் 145 பேர் விண்ணப்பித்துள்ளனர். மாணவர்கள் https://www.tneaonline.org/ என்ற இணையதளத்தில் தரவரிசை எண்ணை தெரிந்து கொள்ளலாம். கடந்த ஆண்டை விட நடப்பாண்டு பொறியியல் படிப்புக்கு 40,645 பேர் கூடுதலாக விண்ணப்பித்துள்ளனர்" என்று கூறினார்.

## மாநகராட்சி ஆணையாளருக்கு சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ஜெயராம் கடிதம்



கோவை மாநகராட்சி ஆணையாளருக்கு சிங்காநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர். ஜெயராம் அனுப்பிய கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது, "கோவை மாநகராட்சியில் கட்டுமானம் மற்றும் கட்டிட இடிப்பு கழிவுகளை மேலாண்மை செய்திட மண்டலம் வாரியாக இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட உப்பிலி பாளையம் பகுதி 60-வது வார்டில் உள்ள சிங்காநல்லூர் வீட்டு வசதி வாரியம் பகுதியில் கட்டிட கழிவுகளை கொட்டுவதற்கு மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்ற உள்ளதாக தெரியவருகிறது. இந்த இடத்தில் 960 நபர்களால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் இருந்து கிரையம்பெறப்பட்டுள்ளது. இவ்வாறு கிரயம் பெறப்பட்டுள்ள தனியார் இடத்தில் கட்டிடக் கழிவுகளை கொட்டுவதற்கு அனுமதிப்பது என்பது ஏற்புடையதாக இல்லை. எனவே நாளை (இன்று) நடைபெற உள்ள மாநகராட்சி கூட்டத்தில் பொருள் எண்:9-ல் 1-வது இடத்தில் உள்ள பகுதியை நீக்கம் செய் யும்படி பொதுமக்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். " என்று கூறியுள்ளார்.

## விஞ்ஞானிகளை அதிரவைத்த 60 ஆண்டு பழைய நாசா செயற்கைக்கோல் சிக்னல்

நாசாவின் விண்வெளி ஆராய்ச்சி வரலாற்றில் அதிர்ச்சி அளிக்கும் சம்பவம் ஒன்று கடந்த சூன் 13ஆம் தேதி பதிவானது. சுமார் 60 ஆண்டுகளாக செயலிழந்திருந்த ரிலே 2 என்ற செயற்கைக்கோளில் இருந்து பூமிக்கு திடீரென சக்திவாய்ந்த ரேடியோ சிக்னல் வந்தது.

இந்த அபூர்வச் சிக்னலை, மேற்கு அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள ஒரு ரேடியோ தொலைநோக்கியம் பிடித்தது. இது 1964ஆம் ஆண்டு நாசா ரிலே திட்டத்தின் கீழ் விண்வெளிக்கு அனுப்பிய தகவல் தொடர்பு செயற்கைக்கோளிலிருந்து வந்துள்ளது என நாசா உறுதி செய்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து கர்டின் பல்கலைக்கழக வானியற்பியல் நிபுணர் கிளான்சி ஜேம்ஸ் தெரிவித்ததாவது: "இந்தச் சிக்னல் எங்கிருந்து வருகிறது என்பதை முதலில் புரிந்து கொள்ள முடியாமல் எங்கள் குழுவினர் அதிர்ச்சியடைந்தோம். இது எங்கள் கேலக்சியில் இருந்து வருவதுபோல தெரிந்தது. ஒருவேளை இது புதிய பல்சர் அல்லது விண்வெளியில் இன்னொரு இயற்கை மின்னணு மூலமாக இருக்கலாம் என்று நினைத்தோம்."

இது இயற்கையான காரணங்களால் அல்ல; செயற்கைக்கோளின் உள்ளமைப்புகள் திடீரென இயங்கத் தொடங்கியதாலும் அல்ல என நாசா கூறியுள்ளது. இதற்கு வெளிப்புற காரணிகள்—எ.கா., சூரிய கதிர்வீச்சுகள், சந்திரன் பிரதிபலிப்பு, அல்லது விண்வெளி மீட்டத் தாக்கங்கள்—போன்றவை காரணமாக இருக்கலாம் என நிபுணர்கள் நம்புகின்றனர். இந்தச் சிக்னல் மூலம் விண்வெளி ஆராய்ச்சியில் ஒரு புதிய கதவுத் திறக்கப்படலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். decades ஆக செயலிழந்த செயற்கைக்கோளிலிருந்து மீண்டும் ஒரு தகவல் கிடைத்திருப்பது, விண்வெளியில் இன்னும் பல மர்மங்கள் இருப்பதைக் காட்டுகிறது.

## வேளாளர், வெள்ளாளர் சங்கங்களின் ஆலோசனை கூட்டத்தில் அவிநாசி சாலை மேம்பாலத்திற்கு வ.உ.சி. பெயர் வைக்க கோரிக்கை



தி கோவை ஹெரால்டு

வேளாளர், வெள்ளாளர் சங்கங்களின் கொங்கு மண்டல சிறப்பு ஆலோசனை கூட்டம் கோவையில் நடைபெற்றது.

திருச்சி, ஜி கார்னரில் ஜூலை 13 அன்று நடக்க இருக்கும் ஒருங்கிணைந்த வேளாளர், வெள்ளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு நடத்தும் சமுதாய மாநாட்டை முன்னிட்டு, கொங்கு மண்டல சிறப்பு ஆலோசனை கூட்டம் கோவை, தி கேரளா கிளப்பில் நடைபெற்றது.

காங்கேயம் பாலசுப்ரமணியம் பிள்ளை, கோவை எம்பிராஜ்குமார், கோவை திருமூர்த்தி பிள்ளை, குன்னூர் குணசேகரன் பிள்ளை, குன்னூர் மகாலிங்கம் பிள்ளை, குன்னூர் சண்முகசுந்தரம் பிள்ளை, உடுமலை சுந்தரகுமார், உடுமலை நரேந்திரன், பழனி பி என் சுந்தரம் பிள்ளை, கோவை ஜெயக்குமார், சென்னை லயன் டி விஜயகுமார், நேரு நகர் நந்து, காட்டூர் செல்வராஜ், ரவி ராமையா பிள்ளை, மேட்டுப் பாளையம் அட்வகேட் பராந்தகசோழன்-தலைவர், மேட்டுப்பாளையம் தனசேகர் கவுன்சிலர், ராஜேந்திரன் வடக்கு மாவட்டம் கோவை அட்வகேட் மதிவாணன், அட்வகேட் வேடப்பட்டி கணேசன், திருச்சி மாணிக்கம் பிள்ளை, பாடலூர் மாணிக்கம் பிள்ளை மற்றும் கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த வேளாளர் வெள்ளாளர் சங்கம் மற்றும் அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த கொங்கு மண்டல சிறப்பு ஆலோசனை கூட்டத்தில், திருச்சியில் நடைபெற உள்ள சமுதாய மாநாட்டில் மேற்கொள்ள உள்ள செயல்பாடுகள் குறித்தும், சமுதாய ஒற்றுமை மற்றும் முன்னேற்றம் குறித்தும் ஆலோசனை நடைபெற்றது. கூட்டத்தில் கோவை புதியதாக கட்டப்படும் அவிநாசி மேம்பாலத்திற்கு வ.உ.சி. பெயர் வைக்க வலியுறுத்தப்பட்டது.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.வி.ஜே. செந்தில் பிள்ளை கூறுகையில், திருச்சியில் நடக்க இருக்கும் சமுதாய மாநாடு, அரசியல் சார்பற்ற ஒரு சமுதாயக் கூட்டம் என்றும் தலைவர் என்ற ஒரு நபர் இல்லாமல் சங்கங்கள் ஒருங்கிணைந்து இந்த மாநாட்டை நடத்த இருப்பதாகவும் கூறிய அவர், சமுதாய முன்னேற்றம் சார்ந்த பிரச்சனைகளை முன்வைத்து இந்த மாநாட்டை நடத்த இருப்பதாக கூறினார்.

மேலும், மாநாட்டின் போது சமுதாய முன்னேற்றம் குறித்த கோரிக்கைகளை தீர்மானங்களாக அறிவிக்க இருப்பதாகவும் கூறினார். டெல்டா மாவட்டங்கள், தென் மாவட்டங்கள், கொங்கு பகுதி என எல்லா பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்க இருப்பதாகவும் 50 ஆயிரத்தில் இருந்து 1 லட்சம் பேர் வரை மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

## கோவையில் வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்களுக்கு புதிய பொது பொறியியல் வளாகம்

கோவையில் வான் வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்களுக்கு ஆதரவாக புதிய பொது பொறியியல் வளாகம் உருவாகிறது

வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறைகளில் பயன்படும் உற்பத்திகளை உருவாக்கும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பயனளிக்கும் வகையில், கோவையில் புதிய பொது பொறியியல் வசதிகள் வளாகம் உருவாக்கப் படுகிறது.

இந்த திட்டம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் (டிட்கோ) மற்றும் டாடா டெக்னாலஜீஸ் ஆகியோரின் கூட்டு உழைப்பாக செயல்படுத்தப்படுகிறது.

அண்ணா பல்கலையின் மண்டல வளாகத்தில் 5 ஏக்கர் நிலத்தில், இரண்டு கட்டங்களாக இந்த வளாகம் உருவாகிறது.

அதிநவீன ஆய்வுக்கூடங்கள், இயந்திரங்கள், சோதனை கருவிகள் ஆகியவை கொண்டுள்ள இந்த வளாகம், வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறைகளுக்கான சிறந்த தொழில்நுட்ப வசதிகளை வழங்கும். இதில் டாடா நிறுவனம் ரூ.300 கோடி மதிப்பிலான முதலீட்டை மேற்கொள்கிறது.

இந்த மையத்தை பயன்படுத்தி எம்.எஸ்.எம்.இ நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளுக்கான செயல் மாதிரிகளை உருவாக்கவும், சோதனைகளையும் மேற்கொள்ளவும் முடியும். குறிப்பாக குறைந்த கட்டணத்தில் இந்த வசதிகளை பயன்படுத்தும் வகையில் திட்டம் அமைக்கப் பட்டுள்ளது.

இதை ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களும் பயன்படுத்த முடியும்.

இந்த உயர்தர தொழில்நுட்ப வளாகம் அடுத்த 4 மாதங்களில் பணிகளை முடித்து திறக்கப்பட இருக்கிறது.

தொழில் மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு பணிகளுக்கான முக்கிய கட்டமாக இது அமைந்து, கோவையை ஒரு தொழில்துறை மையமாக மாற்றும் என எதிர்பார்க்கப் படுகிறது.

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami.